Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, FEBRUARY 21, 2024

புதன்கிழமை பெப்ரவரி 21, 2024 | ஒளி: 09 கதிர்: 197 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## கைதிக்கு பிஸ்கட் கொடுத்தவர் கைது



கொழும்பு விளக்கமறியல் சிறையிலுள்ள கைதியை பார்வையிடுவதற்காக சென்ற நபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## “நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை”

## “2/3 உம், சர்வஜன வாக்கெடுப்பும் அவசியம்”

### உயர்நீதிமன்றம் வியாக்கியானம்

“நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை” எனும் சட்டமூலத்தின் ஷரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணாக இருப்பதனால் சட்டமூலத்தை நிறைவேற்ற பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை பெறுவதுடன், சர்வஜன வாக்கெடுப்பையும் நடத்த வேண்டுமென உயர் நீதிமன்றம் வியாக்கியானம் செய்துள்ளது.

தொடர்ச்சி P2

# PTAயில் பல ஏற்பாடுகள் முரணானவை



உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் பெரும்பாலான ஏற்பாடுகள் அரசியலமைப்புக்கு முரணாக இருப்பதனால் சட்டமூலத்தை நிறைவேற்ற பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறுவதுடன், சர்வஜன வாக்கெடுப்பையும் நடத்த வேண்டுமென உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை(20) காலை 9.30 மணிக்குப் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடியதையடுத்து இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பின்போதே, உயர் நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பைப் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ சபைக்கு அறிவித்தார்.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ 2024.01.10ஆம் திகதி உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை முதலாம் வாசிப்புக்காகப் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருந்தார். இந்த உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக அரசியல் கட்சிகள் உள்ளிட்ட குடிசார் அமைப்புக்கள் 30இற்கும் அதிகமான அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தன.

தொடர்ச்சி P2

## “மின்கட்டணம் குறைக்கப்படும்”



சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் மின்கட்டணம் குறைக்கப்படும். அதற்கான திருத்தம் செய்யப்பட்ட மின்கட்டண திருத்த யோசனை இன்று புதன்கிழமை அல்லது நாளை வியாழக்கிழமை(22) இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும். என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அனுரவே அடுத்த ஜனாதிபதி



இந்த நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக பதவியில் அனுர குமார திஸாநாயக்கவை அமர்த்துவதற்கு நாட்டு மக்கள் தீர்மானித்து விட்டனர் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

மாத்தளையில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் பெண்கள், அணியின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## சிறுமியை கடத்திய சிறுவன் கைது

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் 15 வயது சிறுமியைக் கடத்தி சென்று, தனது வீட்டில் தங்க வைத்திருந்த 17 வயது சிறுவனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் உள்ள தொல்புரம் பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியைக் காணவில்லை என வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை (18) முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அப்பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவன் ஒருவனின் வீட்டில் சிறுமி தங்க வைக்கப்பட்டுள்ளதாகக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், வீட்டிற்கு விரைந்த பொலிஸார், சிறுமியை மீட்டதுடன், சிறுவனைக் கைது செய்தனர். மீட்கப்பட்ட சிறுமியை வைத்திய பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார் கைது செய்யப்பட்ட சிறுவனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வாழ்த்திய மனோ ‘பேர்ச்’ கேட்கிறார்



2017ஆம் ஆண்டு, எமது ஆட்சியின் போது மலையகத்துக்கு எமது அரசாங்கத்தால் அழைத்து வரப்பட்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பெருந்தோட்டங்களில் கட்டப்படும் இந்திய வீடமைப்பு திட்ட வீடுகளின் தொகையை மேலும் 10,000 த்தால் அதிகரிப்பதாக அறிவித்தார்.

எமது ஆட்சி 2019இல் முடிவுக்கு வந்ததால், எம்மால் அதைத் தொடர முடியவில்லை. இன்று அந்த வீடமைப்பு திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதை அறிந்து, அதை வாழ்த்தி வரவேற்கின்றோம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2




## இந்திய மீனவர்களுக்கு எதிராக யாழில் மீனவர்கள் போராட்டம்

■ நிதர்ஷன் வினோத்

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி அடாவடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தி யாழிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் முன்பாக மீனவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு மீனவ சங்கங்கள் இணைந்து இந்தியத் தூதரகத்தை முற்றுகையிடப் போவதாக அறிவித்திருந்ததால் உயர்ஸ்தானிகராலயம் முன்பாக பெருமளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

தொடர்ச்சி P2

### இலங்கை–இந்தியாவின் ஒரு பகுதி

## கூட்டு நிலைப்பாடா?

### விமல் வீரவன்ச சபையில் கேள்வி



இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி என அமைச்சரவை அமைச்சரான ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்திருக்கும் விடயம் தொடர்பில் சபையில் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டன.

தொடர்ச்சி P2



### ராமேஸ்வரம் மீனவர்கள் மூவரை விடுதலை செய்

## ராமநாதபுரம் நோக்கி நடை பயணம்

■ றொசேரியன் லெம்பட்

ராமேஸ்வரம் மீன் பிடித்து துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்று கடந்த 4ஆம் திகதி, எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 23 மீனவர்களின் வழக்கு கடந்த 16ஆம் திகதி ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2

## கடன் செலுத்தும் வீதம் 13 சதவீதத்தால் குறைவு



நாட்டில் 5 கோடியே 75 இலட்சம் வங்கி வைப்பாளர்கள் உள்ள நிலையில், வாடிக்கையாளர்கள் வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்களை மீள் செலுத்தும் வீதம் 13 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “தமிழ் ஊடகவியலாளர்களை ஏன் அழைப்பதே இல்லை”

### இராதா கேள்வி: பந்துல பதில்



ஊடகவியலாளர்களை தெளிவுபடுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டத்திற்கு தமிழ் மற்றும் முஸ்லிம் ஊடகவியலாளர்களையும் பங்கேற்கச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என ஊடகத்துறை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ஒத்திகை பார்த்த குளவி: 73 மாணவர்கள் பாதிப்பு

பாடசாலையின் இல்லங்களுக்கு இடையிலான விளையாட்டு ஒத்திகையின் போது 73 பாடசாலை மாணவர்கள் குளவி கொட்டுக்குள் உள்ளாகிக் காயமடைந்து பசறை வைத்தியசாலையில் செவ்வாய்க்கிழமை (20) அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாணவர்களில் 18 மாணவர்கள் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், ஏனைய மாணவர்கள் சிகிச்சை பெற்று வைத்தியசாலையில் இருந்து வெளியேறி வீடுகளுக்குச் சென்றுள்ளதாகவும் பசறை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் பியரத்ன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## "2/3 உம், சர்வஜன வாக்கெடுப்பும் அவசியம்"

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (20) காலை 9.30 மணிக்குப் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடியதையடுத்து, இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பின்போதே, உயர் நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ சபைக்கு அறிவித்தார்.

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட "நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை" எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

சட்டமூலத்தின் அரசியலமைப்பு ரீதியான செல்லுபடியாகும் தன்மை பற்றிய உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றன,

5(3)(ஆ), 3(இ) ஆம் வாசகங்களுடன் வாசிக்க வேண்டிய 20(3)(ஐ), 70 ஆம் வாசகத்துடன் வாசிக்க வேண்டிய 20(3)(ஒ), 20(3)(ஓ), 3(இ)ஆம் வாசகங்களுடன் வாசிக்க வேண்டிய 20(3)(ஞ),

20(3)(ட), 20(4)(இ), 32(1), 60, 76 மற்றும் 84ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் 12(1)ஆம் உறுப்புரையுடன் இணங்காததுடன் 84(2)ஆம் உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையுடன் அவை நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

எனினும், அவ்வாசகங்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் முன்மொழிந்துள்ள திருத்தங்களை மேற்கொண்டால் அந்த இணங்காமை நீங்கும்.

39(2) மற்றும் 60ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் 3 மற்றும் 4ஆம் உறுப்புரைகளுடன் வாசிக்க வேண்டிய 76 ஆம் உறுப்புரையுடன் இணங்காததுடன் 84(2)ஆம் உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையுடன் அவை நிறைவேற்றப்பட வேண்டும் அத்தோடு, 83 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க மக்கள் ஆணையின்போது, சர்வஜன வாக்கெடுப்பினால் அங்கீகரிக்கப்படுதலும் வேண்டும்.

எனினும், அவ்வாசகங்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் முன்மொழிந்துள்ள திருத்தங்களை மேற்கொண்டால் அந்த இணங்காமை நீங்கும்.

65 ஆம் வாசகம் அரசியலமைப்பின் 14(அ) ஆம் உறுப்புரையுடன் இணங்காததுடன் 84(2) ஆம்உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுதல் வேண்டும். எனினும், அவ்வாசகங்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் முன்மொழிந்துள்ள திருத்தங்களை மேற்கொண்டால் அந்த இணங்காமை நீங்கும்.

அதன் பிரகாரம், உயர்நீதிமன்றத்தினால் முன்மொழிந்துள்ள திருத்தங்கள், குழுநிலையின்போது மேற்கொள்ளப்படும் பட்சத்தில், இந்தச் சட்டம் அல்லது அதன் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் இணங்கும் என உயர்நீதிமன்றம் அதன் தீர்ப்பினை சமர்ப்பித்துள்ளது என்றார்.

## கடன் செலுத்தும் வீதம் 13 சதவீதத்தால் குறைவு

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (20) சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிரணி எம்.பிக்கள் முன்வை த்த கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார் மேலும் அவர் பேசுகையில்,

நாட்டின் வங்கிக் கட்டமைப்பைப் பாதுகாத்துக் கொள்வது முக்கியம் .வாடிக்கையாளர்கள் வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட வணிக கடன்களை மீள் செலுத்தும் வீதம் 13 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. நாட்டில் 5 கோடியே 75 இலட்சம் வங்கி வைப்பாளர்கள் உள்ளனர்.இவர்களில் 60 சதவீதமான வைப்பாளர்கள் 5000 ரூபாவுக்கும் குறைவான வைப்புக்களையே வைத்துள்ளனர்.

ஆகவே, நிதி நிலைமை தொடர்பில் தற்போது மறுசீரமைப்புக்கள் ஏதேனும் செய்தால் அதனால் ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்படுமா என்பது குறித்து மத்திய வங்கி விசேட கவனம் செலுத்தியுள்ளது. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் ஒரு தரப்பினர் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் குறித்து மாத்திரம் விசேட கவனம் செலுத்த முடியாது. ஒட்டுமொத்த மக்களின் நலனையும் கருத்திற் கொண்டு தான் நிதி நிலைமை குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்றார்.

## "தமிழ் ஊடகவியலாளர்களை ஏன் அழைப்பதே இல்லை"

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (20) கேள்வியெழுப்பிய மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பியுமான வேலுசாமி இராதாகிருஷ்ணன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஊடகவியலாளர்களைத் தெளிவுபடுத்தும் வேலைத் திட்டத்திற்குத் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு ஏன் அழைப்பு விடுக்கப்படவில்லை என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் கூறுகையில்,

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் நிதி பங்களிப்புடன் ஊடகவியலாளர்களை தெளிவூட்டும் இந்த வேலைத் திட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த வேலைத் திட்டத்துக்குத் தேவையான நிலையங்களைப் பெற்றுக் கொள்தல், வளங்களுக்கான பங்களிப்பு செலவு உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்படி நிதியமே முன்னெடுக்கின்றது.

கடந்த வருடத்தில் மேற்படி வேலைத் திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த நிதி தற்போது முடிவடைந்துள்ள நிலையில் இந்த வருடத்திற்கான நிதி மேற்படி நிதியத்திடம் கோரப்பட்டுள்ளது. அந்த நிதி கிடைத்ததும் உடனடியாக வேலைத்திட்டம் ஆரம்பமாகும். இதன்போது தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்களும் அழைக்கப்படுவர் என்றார்.

# PTAயில் பல ஏற்பாடுகள் முரணானவை

நியாயமான காரணமின்றி எந்தவொரு நபரையும் கைது செய்வதற்கும் தடுத்து வைப்பதற்கும் இராணுவம், பொலிஸ் மற்றும் கடலோரக் காவல்படையினருக்கு உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் ஊடாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியிருந்ததுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது என தீர்ப்பளிக்கப்பட வேண்டும் என இந்த மனுக்களின் மூலம் கோரப்பட்டிருந்தது.

அத்துடன், இந்த சட்டமூலம் தொடர்பில் சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு கடும் அதிருப்தி வெளியிட்டிருந்தது. கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் இந்த சட்டமூலத்தை மீளாய்வு செய்யுமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தியிருந்தனர்.

இவ்வாறான நிலையிலேயே உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் பெரும்பாலான ஏற்பாடுகள் அரசியலமைப்புக்கு முரணாக இருப்பதனால் சட்டமூலத்தை நிறைவேற்றப் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறுவதுடன் சர்வஜன வாக்கெடுப்பையும் நடத்த வேண்டுமென உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ சபைக்கு மேலும் அறிவிக்கையில்,

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட 'உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு' சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் 3,42,53 மற்றும் 70ஆம் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 12(1)ஆம் உறுப்புரையுடன் இணங்காததுடன், பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையுடன் அவை நிறைவேற்றப்படுதல் வேண்டும். எனினும், அந்த ஏற்பாடுகள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொண்டால் அரசியலமைப்புக்கு முரண் என்ற தன்மை நீங்கும். அத்துடன் சட்டமூலத்தின் 4ஆம் ஏற்பாடு உயர்நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் திருத்தப்படுதல் வேண்டும். 72(1) ஆம் ஏற்பாடு அரசியலமைப்புடன் இணங்காததுடன் விசேட பெரும்பான்மையுடனும் மற்றும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்களினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

அந்த ஏற்பாடுகள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொண்டால் அந்த இணங்காமை நீங்கும். அதற்கிணங்க 72(2)ஆம் ஏற்பாடும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இணங்க திருத்தம் செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் சட்டமூலத்தின் 75(3)ஆம் ஏற்பாடு அரசியலமைப்பின் 3ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 4 (இ) உறுப்புரையை மீறுவதுடன், மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்களினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். அவ்வாசகம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொண்டால் அந்த இணங்காமை நீங்கும்.

சட்டமூலத்தின் 83 (7)ஆம் ஏற்பாடு விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அவ்வாசகம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொண்டால் அந்த இணங்காமை நீங்கும். உயர்நீதிமன்றத்தினால் சட்டமூலத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க சமர்ப்பிக்கப்பட்ட திருத்தங்களை மேற்கொண்டால் மாத்திரமே சாதாரண பெரும்பான்மையுடன் சட்டமூலத்தை சட்டமாக நிறைவேற்ற முடியும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்றார்.

## வாழ்த்திய மனோ 'பேர்ச்' கேட்கிறார்

இதுபற்றி மனோ எம்.பி மேலும் கூறியுள்ளதாவது,

பெருந்தோட்டங்களில் கட்டப்படும் வீடமைப்பு திட்ட வீடுகளின் காணி விஸ்தீரணம், எமது ஆட்சியில் 7 பேர்ச் என அமைச்சரவை பத்திரம் மூலம் உறுதி செய்யப்பட்டது. 2019ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற, இந்த அரசாங்கம் 20 பேர்ச்சில் பெருந்தோட்டங்களில் வீடு கட்டி தருவதாகக் கூறியது. பின்னர் கடந்த வரவு- செலவு திட்டத்தின் போது 10 பேர்சில் பெருந்தோட்டங்களில் வீடமைப்பு என்று கூறியது.

ஆகவே, ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்திய வீடமைப்பு திட்ட வீட்டுக் காணிகளின் விஸ்தீரணம் பற்றிய ஒரு தெளிவின்மை மக்கள் மத்தியில் இருக்கின்றது. ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தில் கட்டப்படும் வீட்டுக் காணி விஸ்தீரணம், ஏழு பேர்ச்சா, பத்து பேர்ச்சா, இருபது பேர்ச்சா என்ற விபரத்தை அரசாங்கம் அறிவிக்க வேண்டும். காணி விஸ்தீரணம் அதிகரிக்கப்பட்டிருக்குமானால், அவை இந்த அரசினால் 10 பேர்ச் அல்லது 20 பேர்ச் என்ற அளவுகளுக்கு அமைச்சரவை பத்திரம் மூலம் அதிகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறோம்.

காணி விஸ்தீரணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் நாம் பெருமகிழ்ச்சி அடைவோம். எப்படியும், 2017ஆம் ஆண்டு, எமது ஆட்சியின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் 10,000 இந்திய வீடமைப்பு திட்டம், மீண்டும் ஆரம்பிக்கப்படுவதை அறிந்து, அதை இதயப்பூர்வமாக வாழ்த்தி வரவேற்கின்றோம் என்றார்.

## கூட்டு நிலைப்பாடா?...

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (20) காலை 9.30 மணிக்குப் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

இதனையடுத்து விசேட கூற்றொன்றை முன்வைத்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் சுயாதீன எதிரணி எம்.பியுமான விமல் வீரவன்ச, இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி என அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ இந்தியா சென்று தெரிவித்திருக்கும் விடயம் அமைச்சரவையின் கூட்டு நிலைப்பாடா, அரசாங்கத்தின் நிலைப்பாடா அல்லது அமைச்சரின் தனிப்பட்ட கருத்தா என்பதை அரசாங்கம் அறிவிக்க வேண்டும்.

அதேநேரம் அந்த கருத்து அமைச்சரின் தனிப்பட்ட கருத்து என்றால். தான் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடு தொடர்பில் அவ்வாறு தெரிவிப்பதற்கு அமைச்சர் ஒருவருக்கு இருக்கும் உரிமை என்ன? என்பது தொடர்பில் விளக்கமளிக்க வேண்டும் என்றார்.

இதற்கு அரச தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பதிலளிக்கையில், அந்த விடயம் தொடர்பில் அமைச்சருடன் தொடர்புகொண்டு அறிவிக்க நடவடிக்கை எடுப்பேன். எனினும், இந்த விடயம் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்ட விடயம் அல்ல என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்த அமைச்சர் மனுஷ நாணயக்கார, அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்த கருத்தை முழுமையாகக் கேட்டிருந்தால், அதன் உள்ளடக்கம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். ஆனால், சமூகவலைத்தளங்கள் அவரின் கூற்றின் சில பகுதிகளை மாத்திரம் எடுத்து வெளியிட்டிருக்கின்றன . அதனால்தான் தவறான கருத்து வெளிப்பட்டிருக்கிறது.

எனவே, குறித்த ஊடக சந்திப்பின் முழுமையான அறிக்கையைப் படித்துப் பார்த்தால் அதன் உண்மைத் தன்மையைத் தெரிந்துகொள்ள முடியும் என்றார்.

இதனையடுத்து மீண்டும் எழுந்த விமல் வீரவன்ச, அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்த விடயமா தொடர்பில் எனக்குத் தெளிவுபடுத்தத் தேவையில்லை.

நாட்டு மக்களுக்குத் தான் தெளிவுபடுத்தப்பட வேண்டும். அமைச்சர் இது தொடர்பாக அவரின் நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும். ஆனால் இதுவரை எந்த அறிவிப்பையோ தெளிவுபடுத்தலையோ அவர் விடுக்கவில்லை என்றார்.

## கைதிக்கு பிஸ்கட் கொடுத்தவர் கைது

கைது செய்யப்பட்ட நபர், சொக்கலேட் பிஸ்கட்டின் நடுவில் புகையிலை துண்டுகளை மறைத்து வைத்து கைதிக்குக் கொடுக்க முயன்றதாகச் சிறைச்சாலை ஆணையாளர் (ஊடகப் பேச்சாளர்) காமினி பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய, கைது செய்யப்பட்ட நபரையும் புகையிலையும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொரளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "மின்கட்டணம் குறைக்கப்படும்"

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (20) சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் பேசுகையில், பாராளுமன்றம் 7 கோடி ரூபாய் மின்கட்டணத்தைச் செலுத்தவில்லை' என்று பொது மின்சார சேவை சங்கத்தின் தலைவர் ரஞ்சன் ஜயலால் 2024.01.22ஆம் திகதி ஊடக சந்திப்பை நடத்திக் குற்றம்சாட்டியுள்ளார். இந்த குற்றச்சாட்டுத் தொடர்பில் நான் ஆராய்ந்தேன். அரச நிறுவனங்களில் பாராளுமன்றம் தான் காலதாமதமில்லாமல் மின்கட்டணம் செலுத்துவதாக மின்சார சபை உறுதிப்படுத்தியுள்ளது.

பாராளுமன்றம் மீதான மக்களின் நன்மதிப்பைச் சீர்குலைக்கும் வகையில் பொய்யான குற்றச்சாட்டை ரஞ்சன் ஜயலால் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, இவரைப் பாராளுமன்ற சிறப்புரிமைகள் குழுவுக்கு அழைத்து விசாரணை மேற்கொள்ள வேண்டுமெனச் சபாநாயகரிடம் வேண்டுகின்றேன்.

இதேவேளை, மின்கட்டணத்தைக் குறைப்பதற்குக் கடந்த டிசம்பர் மாதம் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சகல தரப்புடனும் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது. மின்கட்டண திருத்தம் தொடர்பான யோசனைகளை முன்வைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளைப் பெற்றுள்ளது. இதற்கமைய திருத்தம் செய்யப்பட்ட மின்கட்டண திருத்த யோசனை புதன்கிழமை (21) அல்லது வியாழக்கிழமை (22) இலங்கை மின்சார சபையினால் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்படும். சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் மின்கட்டணம் குறைக்கப்படும் என்றார்.

## அனுரவே அடுத்த ஜனாதிபதி

அதேபோல, இந்த நாட்டை தேசிய மக்கள் சக்தியே அடுத்ததாக ஆட்சி செய்யும் அதனையும் சமூகம் இறுதி செய்து விட்டது என்றும் அவர் கூறினார்.

அவ்வாறான ஆட்சி அமையும். அந்த ஆட்சியிலேயே பெண்கள், சுதந்திரமாக வாழமுடியும். நாட்டையும் கட்டியெழுப்ப முடியும். அதற்கான பொறுப்பு சகலருக்கும் உண்டு என்றும் கூறினார்.

## ராமநாதபுரம் நோக்கி...

இலங்கை நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து ராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த நான்கு நாட்களாகத் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகம் அருகே உள்ள மீன்பிடி அனுமதிச் சீட்டு வழங்கும் அலுவலகத்திலிருந்து சுமார் 600க்கும் மேற்பட்ட மீனவர்கள் அனைத்துக் கட்சியினர் மற்றும் பல்வேறு அமைப்பினர் இணைந்து ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி மூன்று நாள் நடைப் பயணத்தைச் செவ்வாய்க்கிழமை (20) காலை சுமார் 9 மணியளவில் தொடங்கினர். ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் தொடங்கிய நடைப்பயணம் திட்டக்குடி வழியாக ராமேஸ்வரம் பேருந்து நிலையத்தைக் கடந்து ராமநாதபுரம் நோக்கிச் செல்கிறது.

சுமார் 600 க்கும் மேற்பட்டோர் தொடர் நடைப்பயணத்தில் ஈடுபட்டு வருவதால் ராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் 900 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

நடைப் பயணத்தில் மத்திய அரசுக்கு எதிராகவும், இலங்கை அரசுக்கு எதிராகவும் மீனவர்கள் கோஷங்களை எழுப்பி வருகின்றனர்.

## ஒத்திகை பார்த்த குளவி: 73 மாணவர்கள் பாதிப்பு

பசறை தேசிய பாடசாலையின் வருடாந்த இல்லங்களுக்கு இடையிலான விளையாட்டு நிகழ்வுக்கான ஏற்பாடுகள் இந்த நாட்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பசறை உள்ளூராட்சி மன்ற விளையாட்டு மைதானத்தில் ஒத்திகை செவ்வாய்க்கிழமை (20) நடைபெற்றது.

## இந்திய மீனவர்களுக்கு...

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை (20) காலை 11 மணியளவில் மீனவர்கள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்ட பேரணியாக உயர்ஸ்தானிகராலயம் நோக்கி முற்றுகையிடச் சென்றபோது, உயர்ஸ்தானிகராலயகத்துக்கு அருகாமையில் போராட்டக்காரர்களை, பொலிஸார் இடைமறித்தனர்.

இதனைத் தொடர்ந்து மீனவ சங்க பிரதிநிதிகள் 7 பேர் மட்டும் உயர்ஸ்தானிகராலயகத்துக்குள் சென்று மகஜர் கொடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்."இந்திய இழுவை படகு உரிமையாளர்களே! எங்களையும் வாழ விடு", "கடற்றொழிலாளர்களை பிரித்தாலும் தந்திரத்தைச் செய்யாதே", "தொப்புள் கொடி உறவுகளைப் பிரிக்காதே", "இந்திய அரசே இலங்கையின் வடபகுதி மீனவர்களைத் திரும்பிப்பார்", "அத்துமீறும் இந்திய மீனவரின் அராஜகம் அடியோடு ஒழிய வேண்டும்", "சட்டவிரோத அத்துமீறலைத் தடுத்து நிறுத்து", "வடக்கு மீனவர்களின் வளங்களைச் சூறையாடாதே" உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# "உணவுக்கான கொடுப்பனவை அதிகரிக்க தீர்மானம்"



தேசிய கல்வியற் கல்லூரிகளில் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களின் உணவுக்கான கொடுப்பனவை அடுத்த மாதம் முதல் 3,000 ரூபாவால் அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (20) சுயாதீன எதிரணி எம்.பியான டலஸ் அலகப்பெரும எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், கல்வியற் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு, 10 ஆயிரம் ரூபா கடன் பெறுவதற்கான யோசனை ஒன்று ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், அதற்கு மாணவர்கள் விருப்பம் தெரிவித்திருக்கவில்லை.

இந்தநிலையில், அவர்களுக்கான உணவுக்கு தற்போது வழங்கப்படும் கொடுப்பனவை, 5 ஆயிரம் ரூபாவியில் இருந்து 8 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கான யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டது. கடந்த வாரத்தில் அதற்கு நிதிப் பற்றிய குழு அனுமதி வழங்கியதுடன், திங்கட்கிழமை அதனை உறுதிப்படுத்தியது. இதற்கமைய, அடுத்த மாதம் முதல் கல்வியற் கல்லூரிகளில் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களுக்கு 8 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

# சிறுமிக்கு நீதி கோரி போராட்டம்







எம்.எஸ்.எம்.நூர்தீன்

தலைமன்னாரில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பத்து வயது சிறுமி கியானுசியாவுக்கு நீதி கோரியும், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்கக் கோரியும் மட்டக்களப்பில் செவ்வாய்க்கிழமை (20) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் பிரிவைச் சேர்ந்த பெண்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

## "சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கான

# வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு"

எம்.எஸ்.எம்.ஹனீபா



அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் பின்தங்கிய பிரதேசத்தில் வாழும் மக்களின் சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்துள்ளார்.

அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (19) நடைபெற்ற பிராந்திய ஊடகவியாளர்கள் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

"அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை பிரதேசங்களில் நிலவும் சுகாதார பிரச்சினைகள் அவற்றை நிவர்த்திக்க ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் செய்யவேண்டிய வேலைத்திட்டங்கள், சுகாதார பிரச்சினைகளைத் தீர்க்க ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் கடந்த காலங்களில் பாரிய பங்களிப்பினை வழங்கியுள்ளார்கள். சுகாதாரத்துறைக்கு ஊடகவியலாளர்கள் வழங்கிவரும் பங்களிப்பினை பாராட்டுகின்றேன். மக்கள் சுகாதாரத்துறையினருக்கு முழுமையான ஒத்துழைப்பினையும், ஆதரவினையும் வழங்கும்போது தான் மேம்பட்ட சுகாதார சேவைகளை வழங்க முடியும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

அத்துடன், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கம் மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்கி வருகின்றது" எனவும் தெரிவித்துள்ளார்.

## "இலங்கை மீனவர்களை

# உடனடியாக நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டும்"



சீஷெல்ஸ் (Seychelles) பாதுகாப்புப் படையினரின் பிடியில் உள்ள இலங்கை மீனவர்களை உடனடியாக நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (20) விசேட கூற்றை முன்வைத்தே இதனை வலியுறுத்திய அவர் மேலும் கூறுகையில்,

அண்மையில் டிக்கோவிட்ட துறைமுகத்திலிருந்து புறப்பட்ட பல நாள் மீன்பிடி படகுகளை சோமாலிய கடற்கொள்ளையர்கள் கடத்தியுள்ளனர். பின்னர் சீஷெல்ஸ் நாட்டின் பாதுகாப்புப் படையினர் அவர்களை அழைத்துச் சென்று ஒரு மாதத்திற்கு மேலாகியும், அவர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

இதுகுறித்து, வெளிவிவகார அமைச்சின் பதில் செயலாளரைத் தொடர்புகொண்டு தெரிவித்தேன், அந்நாட்டிலுள்ள எமது தூதுவர் கூட ஒருமுறை மாத்திரமே அவர்களைச் சென்று பார்வையிட்டுள்ளார்.

எனவே, இவ்விடயத்தில் அரசு தலையிட்டு சீஷெல்ஸ் பாதுகாப்புப் படையினரின் பிடியில் உள்ள இலங்கை மீனவர்களை உடனடியாக நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.



# மாணவர்களுடன் கிழக்கு ஆளுநர் கலந்துரையாடல்

இந்தியாவில் பட்டப்படிப்பை முடித்துவிட்டு நாடு திரும்பி வேலைவாய்ப்புகள் இல்லாது சிரமப்படும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இந்தியாவில் பட்டப்படிப்பை முடித்துள்ள இந்த மாணவர்கள் அரசாங்க வேலை கிடைப்பதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்ற நிலையில் இவர்களது ஆவணங்களை Offer அமைப்பின் உதவியுடன் ஒழுங்குபடுத்த ஆலோசனைகளை ஆளுநர் வழங்கியுள்ளதுடன், திருப்பி அனுப்பப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில் தலா 50,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யவும் ஏற்பாடு செய்துள்ளார்.

# நேருஜிக்கு அஞ்சலி கூட்டம்

டி.ஷங்கீதன்



மறைந்த முன்னாள் நுவரெலியா மாநகர சபை உறுப்பினர் எல்.நேருஜிக்கு அஞ்சலி கூட்டம் ஒன்று நுவரெலியா ஆவேலிய ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஆலய நிர்வாக சபை தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நுவரெலியா மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சந்தனலால் கருணாரத்ன, முன்னாள் பிரதி முதல்வர் யதர்சனா புத்திரசிகாமனி, முன்னாள் உறுப்பினர் தஹாநாயக்க, மறைந்த முன்னாள் நுவரெலியா மாநகர சபை உறுப்பினர் எல்.நேருஜியின் பாரியார் சுமதி உட்பட பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது மலரஞ்சலி செலுத்தப்பட்டுள்ளதுடன், நுவரெலியா மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் ஆலயத்தின் ஆயுள் காப்பாளருமான இரா.பாலகிருஸ்ணன் கவிதாஞ்சலியும் இடம்பெற்றுள்ளது.

# காணி விடுவிப்பு தொடர்பில் கலந்துரையாடல்

நிதர்ஷன் வினோத்



யாழ்ப்பாணம்-வலிகாமம் வடக்கில் காணி விடுவிப்பு தொடர்பில் யாழ்ப்பாண இராணுவ கட்டளைத் தளபதியுடன் யாழ். மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட உயரதிகாரிகள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

பலாலி இராணுவ தலைமை அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பில் யாழ்ப்பாண இராணுவ கட்டளைத் தளபதி எம்.சி.பி.விக்ரமசிங்கவை யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் உள்ளிட்ட குழுவினர் சந்தித்துள்ளனர்.

குறித்த சந்திப்பில் ஜனாதிபதியின் வடமாகாண மேலதிக செயலாளர் இளங்கோவன் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) கே.ஸ்ரீமோகனன், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிவகங்கா சுதீஸ்னர் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

இதன்போது, யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்குட்பட்ட வலிகாமம் வடக்கில் காணிகளை இராணுவ கட்டுப்பாட்டில் இருந்து விடுவிப்பது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

# பெண் மீது வாள் வெட்டு; ஒருவர் கைது




எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியில் பெண்ணொருவர் மீது வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்ட குற்றச்சாட்டில் நபர் ஒருவர் திங்கட்கிழமை (19) கைது செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த பெண் அயலவர்களால் மீட்கப்பட்டு, சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கோப்பாய் பொலிஸார், சந்தேகநபரை கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், குறித்த நபர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர் என தெரியவந்துள்ளது.

# வெளிநாடு செல்லவிருந்த இளைஞன் உயிர் மாய்ப்பு

ரஸீன் ரஸ்மின்



புத்தளம் - முந்தல், மங்கள எளிய பகுதியில் இளைஞன் ஒருவன் தனது வீட்டில் வைத்து உயிரை மாய்த்துக்கொண்ட நிலையில் திங்கட்கிழமை (19) மீட்கப்பட்டுள்ளார்.

மங்கள எளிய பகுதியைச் சேர்ந்த காவிந்த மதுசங்க என்ற 24 வயதுடைய இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் தாயும், சகோதரியும் சந்தைக்கு சென்ற நிலையில், வீட்டில் இளைஞனும், தந்தையுமே இருந்துள்ளனர்.

இதன்போது, தந்தை தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளை பார்த்துக் கொண்டிருந்தபோது, குறித்த இளைஞன் வீட்டின் அறையொன்றுக்குள் சென்று கதவைப் பூட்டிக்கொண்டுள்ளார்.

இந்நிலையில், சந்தைக்குச் சென்ற தாயும், சகோதரியும் வீட்டுக்கு வந்து, மகனைத் தேடி அறையின் கதவைத் தட்டி அழைத்த போதும் இளைஞனிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்காதமையால், கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது இளைஞன் தன் உயிரை மாய்த்துக்கொண்ட நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

உடனடியாக அவரை முந்தல் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ள போதிலும், இளைஞன் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞன் வெளிநாடு செல்வதற்காக 75,000 ரூபாய் பணம் கேட்டதாகவும், தற்போது கையில் பணம் இல்லாததால், மோட்டார் சைக்கிளை விற்று அல்லது அடகு வைத்து பணத்தை ஒழுங்கு செய்து தருவதாகத் தான் கூறியதாகவும், வெளிநாடு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுமோ என்ற மன அழுத்தம் மகனுக்கு இருந்ததாகவும் தந்தை தெரிவித்துள்ள முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# தாய்க்கு இணையான மரியாதையை தாய்மொழிக்கும் வழங்குக

உலகத் தாய்மொழி நாள் அறிவிக்கப்பட்டதன் வெள்ளிவிழா ஆண்டு இன்று புதன்கிழமை (21) கொண்டாடப்படுகிறது.

உலகத் தாய்மொழி நாளுக்கு நீண்ட, உணர்ச்சி மிகுந்த வரலாறு உண்டு. இந்திய விடுதலைக்கு முதல் நாள் பாகிஸ்தான் தனி நாடாக அறிவிக்கப்பட்டபோது, கிழக்கு வங்கமும் பாகிஸ்தானின் அங்கமாக மாறியது. பாகிஸ்தான் தனி நாடாக அறிவிக்கப்பட்டதிலிருந்தே வங்க மொழிக்கு உரிய மரியாதை அளிக்கப் படவில்லை.

அதைக் கண்டித்தும், வங்க மொழியை அங்கீகரிக்க வலியுறுத்தியும் 1952ஆம் ஆண்டு இதே பெப்ரவரி 21ஆம் நாளில் அன்றைய கிழக்கு பாகிஸ்தான் தலைநகர் டாக்காவில் நடத்தப்பட்ட போராட்டத்தின்போது, 5 மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதை நினைவு கூறும் வகையில், அந்நாளை உலக தாய்மொழி நாளாக 1999ஆம் ஆண்டு யுனெஸ்கோ அறிவித்தது.

தமிழ்நாட்டில் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பது தான் கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக முழக்கமாக உள்ளது. உலகத் தாய்மொழி நாள் அறிவிக்கப்பட்ட நாள் முதல் இந்த முழக்கம் தீவிரமடைந்தது. உலகத் தாய்மொழி நாள் அறிவிக்கப் பட்ட அதே ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் தான் தமிழ்நாட்டில் தமிழைக் கட்டாய பயிற்று மொழியாக்க வலியுறுத்தி சென்னையில் 102 தமிழறிஞர்கள் சாகும்வரை உண்ணாநிலை மேற்கொண்டனர்.

ஆனால், ஆட்சியாளர்களுக்கு அக்கறை இல்லாததால் அன்னைத் தமிழை இன்று வரை அரியணை ஏற்ற முடியவில்லை. தமிழ் பயிற்று மொழி மட்டும் தான் என்றில்லாமல், கடைகளின் பெயர்ப்பலகைகள், உயர்நீதிமன்றம், திருமணங்கள், ஆலய வழிபாடு என எங்குமே அண்னைத் தமிழைக் காண முடியவில்லை.


இப்படியாக தமிழன்னைக்கு இழைக்கப்படும் அவமானத்தைத் துடைக்க வேண்டும் என்பதற்காகத் தான் கடந்த ஆண்டு உலகத் தாய்மொழி நாளான 2023ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆம் நாள் சென்னையில் தமிழன்னை சிலையுடன் தமிழைத்தேடி என்ற தலைப்பில் பயணம் தொடங்கப்பட்டு பெப்ரவரி 28 ஆம் நாள் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் பயணம் நிறைவு செய்யப்பட்டது.

நமது நாட்டை பொறுத்தவரையில், அரசியலமைப்பில் மட்டுமே, தமிழ் மொழிக்கு அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. பெரும்பாலான ஆவணங்கள் சிங்கள மொழியில் அனுப்பப்படுகின்றன. தமிழ்மொழியில் அனுப்பப்படும் ஆவணங்களிலும் ஏகப்பட்ட கருத்து, எழுத்துப் பிழைகளே உள்ளன. இவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு முன்வரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

தாய்க்கு இணையான மரியாதையை தாய்மொழிக்கும் வழங்கப்பட வேண்டும். அன்னை மொழிக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்காக எந்த தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் உலகத் தாய்மொழி தினத்தைக் கொண்டாடப்படும் நிலையில், அந்நாளைக் கொண்டாடும் அனைவருக்கும் எமது வாழ்த்துகள்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# ஜனாதிபதியின் ஒற்றுமை கோரிக்கையின் நோக்கம்



எம்.எஸ்.எம். ஐயூப்

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஜனாதிபதியாக பதவியேற்ற ரனில் விக்ரமசிங்க இது வரை பாராளுமன்றத்தில் மூன்று கொள்கை பிரகடனங்களை சமர்ப்பித்திருக்கிறார். மூன்றாவது கொள்கைப் பிரகடனம் கடந்த 7ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. அதில் அவர் மூன்று விடயங்களை முக்கியமாக எடுத்துரைத்தார். முதலாவதாக மின்சாரமின்றி, எரிபொருளின்றி, எரிவாயுமின்றி மக்கள் 2022இல் எதிர்நோக்கிய கடும் கஷ்டமான நிலைமையைத் தாம் பெருமளவில் மாற்றியதாக அவர் கூறினார். ஆனால், நாடு பெரும் கடன் சுமையை எதிர்நோக்கியிருப்பதாக அவர் இரண்டாவதாக எடுத்துரைத்தார். மூன்றாவதாக நாட்டை மீட்டெடுப்பதற்காகச் சகல அரசியல் கட்சிகளும் ஒன்று சேர வேண்டும் என்பதாகும்.

தமக்கு எதிராக அரசியலில் ஈடுபட்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்று சேர்ந்து செயற்பட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியால் முடியுமென்றால் முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் செயற்பட்ட தற்போது ஐக்கிய மக்கள் சக்தியாகச் செயற்படுவோருக்கு இப்போது தம்மோடு ஒன்று சேர்ந்து ஏன் செயற்பட முடியாது என்றும் ஊழலை ஒழிக்கும் நோக்கில் 2015இல் தமது தலைமையிலான அரசாங்கத்தோடு இணைந்து செயற்பட்ட மக்கள் விடுதலை முன்னணிக்கு இப்போது ஏன் அரசாங்கத்தோடு இணைந்து செயற்பட முடியாது என்றும் அவர் அவ்வுரையில் கேள்வி எழுப்பினார்.

கடந்த வியாழக்கிழமை அனுராதபுர வடக்கு நீர் விநியோக திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் வைபவத்தின்போதும், நாட்டை பொருளாதார ரீதியாக மீட்டெடுப்பதற்காக அரசியல் கட்சிகள் ஒன்று நேர்ந்து செயற்படுவதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

எடுத்த எடுப்பில் இது மிகவும் நியாயமான கேள்வியாகவே தெரிகிறது. ஒற்றுமைக்கான எந்தவோர் ஆலோசனையையும் அதனை ஆழமாக ஆராயாமல் மேலோட்டமாக பார்த்து எவராலும் நிராகரிக்க முடியாது. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பார்கள். ஆனால், அவை அரசியலில் செல்லுபடியாகாதவையாகும். ஏனெனில், அரசியல் என்பதே அதிகாரத்துக்கான போட்டியாகும். அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமை என்று ஜனாதிபதி எதனை எதிர்பார்க்கிறார் என்பது தெளிவில்லை. நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுத்து, அபிவிருத்திப் பாதையில் செலுத்துவதற்கான பொறுப்பைப் பகிர்ந்துகொள்வதையா அல்லது எதிரணி அரசியல் கட்சிகள் வெறுமனே அரசாங்கத்தில் சேர்ந்து அமைச்சர் பதவிகளையும் பெற்று எந்த அடக்குமுறை சட்டத்தையும் நிறைவேற்றிக்கொள்ளும் வகையில் பாராளுமன்றத்தில் தமக்கு ஆதரவு வழங்குவதா அல்லது இவ்வெதுவுமே இல்லாது அரசாங்கத்தை விமர்சிக்காது இருப்பதையா அவர் எதிர்பார்க்கின்றார்?

நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் பொறுப்பை பகிர்ந்து கொள்வதற்கு அதற்கான திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை. தமது கட்சியின் மேலும் சில மூத்த உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்க வேண்டும் என்று ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்றது முதல் கடந்த ஒன்றரை ஆண்டுகளாகக் கோரிக்கை விடுத்து வந்த போதிலும், அவர் அதற்குச் செவிசாய்க்கவில்லை. எனவே, எதிர்க்கட்சிகளுடன் அவர் அமைச்சுப் பொறுப்புக்களைப் பகிர்ந்துகொள்ள முற்படுவாரா என்பது சந்தேகமாகவே இருக்கிறது.

ஆனால், எதிர்க்கட்சிகள் தம்மையும் அரசாங்கத்தையும் விமர்சிக்காது மௌனமாக இருக்க வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அவர்களது வாயை மூடுவதற்காகவே நிகழ்நிலை காப்புச் சட்டம் மற்றும் புதிய பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டம் போன்றவற்றை அரசாங்கம் கொண்டு வரப்போகிறது. இதற்கு முன்னரும் அரசாங்கம் கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் எட்டு உயர் பாதுகாப்பு வலயங்களை பிரகடனப்படுத்தி புனர்வாழ்வு அதிகாரசபை சட்டம் என்றதொரு சட்டத்தைக் கொண்டு வர முயன்றது. உயர் நீதிமன்றம் அவற்றைத் தடுத்தது.

இப்போது அரசாங்கம் அதே நோக்கத்தை எதிர்க்கட்சிகளுக்கு ஒற்றுமையைப் போதித்து நிறைவேற்றிக்கொள்ள முயல்கிறது. அத்தோடு, பாராளுமன்றத்தில் தமது பெரும்பான்மையை அதிகரித்துக்கொள்வதும் அதன் நோக்கமாக இருக்கலாம். ஏனெனில், தமது அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்காக ஜனாதிபதி ஆட்சி முறையிலும் தேர்தல் சட்டங்களிலும் பல மாற்றங்களைக் கொண்டுவர ரணில் முயல்வதாக பல்வேறு செய்திகள் அடிக்கடி வெளியாகின்றன. அதற்காக அவருக்குப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் வேண்டும்.

நீண்ட காலமாக எதிரும் புதிருமாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் ஒன்று சேர முடியுமானால் தற்போதைய எதிர்க்கட்சிகளுக்கு ஏன் அரசாங்கத்தோடு இணைய முடியாது என்று ஜனாதிபதி கேள்வி எழுப்பினாலும். அன்று ஐ.தே.கவும் பொதுஜன முன்னணியும் சூழ்நிலையின் நிர்ப்பந்தத்தால் ஒன்று சேர்ந்தனவே தவிரக் கொள்கை அடிப்படையில் இணையவில்லை. கோட்டாபயவின் அரசாங்கத்துக்கு எதிராக எழுந்த மாபெரும் மக்கள் கிளர்ச்சியின்போது, ரணிலதும் பொதுஜன முன்னணியினதும் இருப்புக்காகவே இரு கட்சிகளும் ஒன்றிணைந்தன.

அது நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காகவோ நாட்டின் இனப் பிரச்சினை போன்ற ஏதாவது ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவோ மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையல்ல. உண்மையிலேயே நாட்டின் எந்தவித பிரச்சினையைப் பற்றியும் அவர்கள் கலந்துரையாடவும் இல்லை.

ஜனாதிபதி கோட்டாபய அரசாங்கத்துடன் இணையுமாறு 2022இல் எதிர்க்கட்சிகளைக் கேட்டுக்கொண்டபோது, இன்று ஒற்றுமையைப் போதிக்கும் ரணில் விக்ரமசிங்க, அதற்கு முதலில் இணங்கவில்லை. பின்னர் பொதுத் தேர்தலில் மாவட்ட ரீதியில் ஓர் ஆசனத்தையாவது வென்றெடுக்க முடியாதிருந்த அவருக்குக் குறுக்கு வழியில் ஜனாதிபதியாகும் வாய்ப்பு கிட்டவே தான் அவர் அரசாங்கத்தில் இணைந்தார்.

2022 இல் மார்ச் 3ஆம் திகதி விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சரவையிலிருந்து கோட்டா நீக்கினார். அது பொருளாதார நெருக்கடியால் கோட்டா செய்வதறியாது தவித்துக்கொண்டு இருந்த காலம். எனவே, அவ்விருவரும் மீண்டும் கோட்டாவை அணுகி பொருளாதார பிரச்சினைகளைப் பற்றி ஆராயக் கலந்துரையாடல் ஒன்றைக் கேட்டனர். அதன்படி, நடத்தப்பட்ட கூட்டத்தின்போது, சர்வகட்சி இடைக்கால அரசாங்கமொன்றை அமைக்க வேண்டுமென்று அவர்கள் ஆலோசனைக் கூறினர். மீண்டும் அமைச்சர்களாவதே அவர்களது திட்டமாகியது. அதனை உணர்ந்தாரோ, இல்லையோ கோட்டா அதனை ஏற்றுப் பிரதமரான தமது சகோதரரைத் தவிர்ந்த சகல அமைச்சர்களையும் பதவி விலகுமாறு பணித்தார். அதன் பின்னர் அமைச்சரவையில் சேருமாறு கோட்டா, ஏப்ரல் 1ஆம் திகதி எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக்கொண்ட போதிலும், அதற்கு முன்தினம் கோட்டாவின் வீட்டருகே அரசாங்கத்துக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. அது பரவும் நிலையும் காணப்பட்டதால் எவரும் அமைச்சரவையில் சேர முன்வரவில்லை. கோட்டாவுக்கு ஆலோசனை வழங்கிய இருவருமாவது அதற்கு முன்வரவில்லை.

ஏப்ரல் 9 ஆம் திகதி 'அரகலய' போராட்டம் ஆரம்பமாகியது. மே 9 ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள், ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்கியதால், நாடு முழுவதிலும் பதற்ற நிலை பரவி, மஹிந்த பிரதமர் பதவியிலிருந்து இராஜினாமா செய்ய நேர்ந்தது. இந்தநிலையில் தான், வாக்குப் பலத்தால் பதவிக்கு வரமுடியாத தமக்கு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றச் சந்தர்ப்பம் உருவாகியிருப்பதை ரணில் உணர்ந்தார். அதன்படி, கோட்டாவுடன் ஏற்கெனவே ஏற்பட்டிருந்த புரிந்துணர்வின்படி அவர் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

இது கொள்கை ரீதியிலான இணக்கமல்ல. எனவேதான் பிரதமராகப் பதவி ஏற்றதன் பின்னரும் கோட்டாவை விரட்டுவதற்கான 'கோட்டா கோ கம' போராட்டத்துக்குப் பகிரங்கமாகவே ரணில் ஆதரவு வழங்கினார். அதற்காக அவர் தமது கட்சி முக்கியஸ்தர்களான கொழும்பு மேயர் ரோஸி சேனாநாயக்க மற்றும் ருவன் விஜேவர்தன ஆகியோரை பணித்திருந்தார். ஜனாதிபதி பதவி விலகினால் அல்லது விரட்டப்பட்டால் தாமே ஜனாதிபதி என்பதை அவர் அறிந்திருந்தார்.

அவர் எதிர்பார்த்து ஜூலை 9 ஆம் திகதி இடம்பெற்றது. கோட்டா அன்று நாட்டை விட்டுத் தப்பிச் சென்றார். 14 ஆம் திகதி உத்தியோகப்பூர்வமாகப் பதவியைத் துறந்தார். 20ஆம் திகதி ரணில் ஜனாதிபதியாகப் பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்டார். 22ஆம் திகதி தமக்கு அப்பதவிக்கு வர வழிசமைத்த ஆர்ப்பாட்டக்காரர்களை அடித்து விரட்டினார். அது ஐ.தே.கவுக்கும் பொதுஜன முன்னணிக்கும் இடையிலான உறவை மேலும் பலப்படுத்தியது. இது சூழ்நிலையின் காரணமாக ஏற்பட்ட ஒற்றுமை என்று அதனால் தான் கூறுகிறோம். நாட்டை பொருளாதார ரீதியாக மீட்டெடுப்பதற்காக எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தோடு இணைய வேண்டும் என்றே இப்போது ஜனாதிபதி கூறுகிறார். ஆனால் அதற்கான முறையாக வகுக்கப்பட்ட விஞ்ஞானபூர்வமான திட்டம் ஒன்று இல்லை. சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டமானது உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் திட்டமே தவிர் நீண்ட கால திட்டமல்ல. அத்திட்டத்தின் கீழ், மென்மேலும் கடன் பெற்றாலும் அதனைத் திருப்பிச் செலுத்த வழிமுறைகளைக் காண வேண்டும் என்று ஜனாதிபதியே தமது கொள்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மற்றொரு முக்கியமான விடயம் என்னவென்றால் எதிர்க்கட்சிகளை அடக்கவும் ஏமாற்றவும் முற்படும் ஓர் அரசாங்கத்தால் ஒற்றுமையை நிலைநாட்ட முடியாது என்பதேயாகும். ஒரு புறம் அடக்குமுறை சட்டங்களை நிறைவேற்ற முயலும் அரசாங்கம் தமிழ்க் கட்சிகளை ஏமாற்றியும் வருகிறது. எவ்வாறு ஒற்றுமை ஏற்படும்?



## வாழ்வியல் தரிசனம்

கனவு நிலை அழிந்து போய்விடும். நனவு நிலையே இயற்கையான உண்மை நிலை. கனவுகளில் மட்டும் வாழ முடியாது.

பல அறிஞர்கள் தங்கள் எண்ணங்களை நிஜமாக்கினார்கள். அவை அவர்களின் அறிவினாலும் தொடர் முயற்சியாலும் நிறைவேறின. ஆனால் எந்த முயற்சியையும் செய்யாது, கனவுகளை மட்டும் நம்பி வாழ்பவர்களை என்ன செய்வது?

நிழல் எப்படி நிஜமாகும்? எங்களின் நிழல்கூட சிறிது அசைந்தால் மாறிவிடுகின்றது. இருட்டில் ஏது நிழல்? ஒவ்வொரு நாளும் பற்பல கனவுகள், போகாத இடங்களில் பயணம் செய்து சுற்றித் திரிகின்றது.

உண்மையில் மனிதன் வாழவேண்டும். இடையிடையே தோன்றி, மறையும் காட்சிகளில் மயங்கக்கூடாது. இதுவும் ஒரு மாயநிலை.

தேவையற்ற நினைவுகளைத் தூக்கித் தூக்கி எறிக. அதிகமாக ஆசைப்படக் கூடாது. உங்களை நீங்கள் நம்பாமல் எதுவுமே முழுமையாகாது. நிஜவாழ்க்கையில் புகுவதே சுலபமான முன்னேற்றம்.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### குப்பைகளை பாருங்கள்




ஹட்டன் நகரத்தில் உள்ள பிரதான பேருந்து நிலையத்தில் குப்பைகள் நிறைந்து காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஹட்டன் பஸ் டிப்போக்கு சொந்தமான இந்த பேருந்து நிலைய வளாகம் மற்றும் கட்டடத்தின் உட்பகுதி முறையாகத் துப்புரவு செய்யப்படுவதில்லை என பிரதேசம் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

குறிப்பாக பஸ் நிலையத்தின் நேரக் கண்காணிப்பாளர் அமர்ந்திருக்கும் பகுதியில் குப்பைகள் குவிந்து காணப்படுவது மாத்திரமல்லாது, பிரதேசம் எங்கும் துர்நாற்றம் வீசுவதாகப் பயணிகள் தெரிவித்தனர்.

இப்பகுதியைத் துப்புரவாக வைத்துக்கொள்ளவும் ஹட்டன்-டிக்கோயா நகரசபை மற்றும் ஹட்டன் பஸ் டிப்போ ஆகியவற்றின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்காது அலட்சியமாக இருந்து வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை எடுப்பதன் ஊடாக பயணிகள் எதிர்நோக்கும் அசோகரித்துக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு வேண்டுகோள் விடுகின்றனர்.

– சுஜிதா

ஆசியாவில் 300,000 சிறு வணிகங்களுக்கு

# டிஜிட்டல் பாதுகாப்பு பயிற்சி

The Asia Foundation

with support from Google.org

கூகுளின் (Google) தொண்டு நிறுவனமான Google.org, 300,000 பின்தங்கிய குறு மற்றும் சிறு வணிகங்களினதும் சமூக நிறுவனங்களினதும் இணையத் திறன்களை மேம்படுத்துவதற்கு, இணையசமாதான (CyberPeace) நிறுவனத்துடனும் உலகளாவிய சைபர் கூட்டணியுடனும் (Global Cyber Alliance) இணைந்து APAC சைபர்பாதுகாப்பு நிதியினை (APAC Cybersecurity Fund) நிறுவுவதற்கு, ஆசிய மன்றத்திற்கு (The Asia Foundation) $15M வழங்குகிறது.

இணையவெளி அபாயங்களிலிருந்து உள்ளூர் சமூகங்கள் மற்றும் மாணவர்களை பாதுகாக்குமுகமாக, மேம்படுத்தல் கருவிகள் வழங்கியும் உதவி மையங்களை (சைபர் clinic) நிறுவியும் ஆசிய மன்றமானது, இத்திட்டத்தினை செயல்படுத்தும் பிராந்திய பங்காளர்களான நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயற்பட எதிர்பார்த்துள்ளது.

இந்த முயற்சியானது பங்களாதேஷ், ஹொங்காங், இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், தென் கொரியா, மலேசியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து மற்றும் வியட்நாம் உட்பட 13 நாடுகளில் நிறுவப்படவுள்ளது.

2023இல் அதிக எண்ணிக்கையிலான சைபர் தாக்குதல்களைப் பதிவுசெய்துள்ள ஆசியா மற்றும் பசிபிக்கை உள்ளடக்கிய பிராந்தியமானது, இணையவழிக் குற்றங்கள் பெருகும் மையமாக மாறியுள்ளது. இவ்வச்சுறுத்தல்கள் மற்றும் தாக்கங்கள் சிறு வணிகங்களுக்கு மிகவும் ஆபத்தானவை. இப்பிராந்தியத்திலுள்ள சிறு வணிகங்களுள், அரைவாசிக்கும் மேற்பட்டவைகள் கடந்த ஆண்டில் எதாவதொரு சைபர் தாக்குதலை அனுபவித்ததாக ஆராய்ச்சி காட்டுகிறது,

இவற்றுள் தீம்பொருள் (malware) தாக்குதல்களே பொதுவானதாக நடைபெறுகின்றன. இத்தகைய சம்பவங்கள் வணிக செயல்பாடுகளை அச்சுறுத்துவதுடன், வருமான இழப்பை ஏற்படுத்தி, வணிகத்தின் மதிப்பை இழிவுபடுத்துவதாகவும் அமைகின்றன. 70% க்கும் அதிகமான சிறு வணிக உரிமையாளர்கள் தீவிர இணையத் தாக்குதல்கள் தங்கள் வணிகத்தை நிறைவுக்குக் கொண்டுவரக்கூடும் என்ற அச்சத்தை வெளிப்படுத்துகின்றனர். இணைய அச்சுறுத்தல்கள் அதிகரித்து வரும் இச்சூழலில், தொழில்முனைவோரும் இணையப் பாவனையாளர்களும் ஏற்படக்கூடிய தாக்குதல்களைக் கண்டறிந்து, இணையவெளியில் தோன்றும் அச்சுறுத்தல்களிலிருந்து தங்களையும் தங்கள் வணிகத்தையும் பாதுகாக்கத் தேவையான திறன்களைக் கொண்டிருப்பது அவசியமாகும்.

அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பாதுகாப்பான டிஜிட்டல் சுற்றுச்சூழலை உருவாக்க முயலும், APAC சைபர்பாதுகாப்பு நிதியானது, ஆசிய மன்றத்தினூடாக, சிறு வணிகங்களினதும் பாதிபிற்காளாகும் ஏனைய குழுக்களினதும் டிஜிட்டல் பாதுகாப்பை வலுப்படுத்துமுகமாக, உள்ளூர் பயிற்சி வாய்ப்புகள் மற்றும் வளங்களுடனும் அவற்றை இணைக்க எதிர்பார்த்துள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் உள்ளூர் பங்காளர்களின் ஆதரவுடன், இந்த முயற்சியானது, பங்களாதேஷ், ஹொங்கொங், இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், கொரியா, மலேசியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில், சைபர் உதவி மையங்கள் (கிளினிக்குகள்) மற்றும் மேம்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

“ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் டிஜிட்டல் பொருளாதாரத்தினூடாக தம் வழியைக் கண்டறியும், அதிக பாதிப்பிற்கேதுவான சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கும் இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கும் தேவையான இணையத் திறன்களை வழங்கும் ஆசிய மன்றத்தை ஆதரிப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். APAC Cybersecurity Fund ஆனது, உலகளாவிய பங்காளர்களின் உதவியுடன், உள்ளூர் நிபுணத்துவம் மற்றும் வடிவமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் கொண்டு, அடிமட்டத்தில் சைபர் விரிதிறனை வளர்ப்பதற்கு ஒரு கூட்டு அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது. இந்த முயற்சி, இலங்கையிலும் APAC பிராந்தியத்துக்குள்ளும் பாதுகாப்பான இணையவெளியை உருவாக்குவதில் ஏற்படுத்தும் முன்னேற்றங்களை நாங்கள் ஆவலுடன் எதிர்நோக்குகிறோம்” என மரிஜா ரலிக் தெரிவித்தார்.

2020 இன் தேசிய சைபர் பாதுகாப்பு சுட்டெண்ணில் இலங்கையானது, டிஜிட்டல் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கான பாதுகாப்பில் குறிப்பாக குறைந்த மதிப்பெண்களைப் பெற்று, 175 நாடுகளுள் 81ஆவது இடத்தைப் பெற்றது. இத்தகைய சூழலில் இந்தத் திட்டமானது 10,000 தனிநபர்களை உள்ளடக்கிய 5,000 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை (MSMEs) அடைய எதிர்பார்த்துள்ளது. இலங்கைக்கான ஆசிய மன்றத்தின் நாட்டுப் பிரதிநிதி தினேஷா டி சில்வா, நிகழ்ச்சித் திட்டத்தின் அத்தியாவசியத் தன்மையைப் பின்வருமாறு எடுத்துரைத்தார்.

“இலங்கையில் அதிவிரைவாகப் பரந்து வரும் டிஜிட்டல் நிலப்பரப்பின் பின்னணியில், புத்தாக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும்பங்களிக்கும் குறு, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் முக்கிய பங்கை இனங்காண்பதுடன், அவை சைபர் அச்சுறுத்தல்களுக்கான பிரதான இலக்காகுவதையும் அங்கீகரிப்பது அவசியம். கணிசமான எண்ணிக்கையிலான MSMEகள், தீங்கிழைக்கும் சைபர் தாக்குதல்களுக்கு ஆளாவதை நாம் கண்ணோக்காதிருக்க முடியாததுடன், அவற்றின் இணையப் பாதுகாப்பை மேம்படுத்த வேண்டிய தேவையின் அவசரத்தை இது எடுத்துக்காட்டுகிறது.

விரிவான இணையப் பாதுகாப்பு கல்வி மற்றும் விழிப்புணர்வுடன் இந்த நிறுவனங்களை மேம்படுத்துவதென்பது ஒரு மூலோபாய தேவை மட்டுமல்ல, ஒரு முக்கியமான தேசிய முதலீடுமாகும்...”

இத்திட்டத்தின் உள்ளூர் செயற்பாட்டுப் பங்காளர்களில் ஒன்றான சிறு தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் சுதீர ஜயரத்னவும், MSMEகளின் அபிவிருத்தியிற்கு இத்திட்டம் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்து தனது எண்ணங்களைத் தெரிவித்தார்.

“சிறு தொழில்கள் மேம்பாட்டுப் பிரிவானது, நவீன டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வணிகங்களை மேம்படுத்தத் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருவதுடன், சிறு மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு சைபர் சுகாதாரம் மற்றும் சைபர் பாதுகாப்பு பற்றிய அறிவை வழங்குவதன் அவசியத்தை அடையாளம் கண்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் கூகுளின் ஆதரவுடன் ஆசிய மன்றத்துடன் இணைந்து பணியாற்ற கிடைத்திருக்குமிந்த வாய்ப்பு, எங்கள் இலக்கை அடைய எங்களை வலுப்படுத்தும்”

ஆசிய மன்றத்தைப் பற்றி (asiafoundation.org): ஆசிய மன்றமானது ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியம் முழுவதும் மனித வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கும் பற்றுறுதிக் கொண்ட, இலாப நோக்கற்ற சர்வதேச அபிவிருத்தி ஸ்தாபனமாகும். 70 ஆண்டுகால அனுபவமும் ஆழ்ந்த உள்ளூர் அறிவும் கொண்ட எங்கள் பணி, நல்லாட்சி, காலநிலை நடவடிக்கை, பால்நிலை சமத்துவம், கல்வி மற்றும் தலைமைத்துவம், உள்ளடக்கமுள்ள வளர்ச்சி மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு ஆகிய பகுதிகளில் கவனம் செலுத்துகிறது. சான் பிரான்சிஸ்கோவில் அமைந்துள்ள தலைமையகம் மற்றும் வொஷிங்டன், DC இல் உள்ள அலுவலகத்தின் ஆதரவுடன், ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியம் முழுவதும் பரந்துள்ள எங்களது 17 நிரந்தர நாட்டு அலுவலகங்கள் மற்றும் திட்டங்கள் மூலம், நாம் 20க்கும் மேற்பட்ட நாடுகளில் பணியாற்றுகிறோம். எமது நிதியானது இருதரப்பு மற்றும் பலதரப்பு அபிவிருத்தி முகவர்கள், மன்றங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனிநபர்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பன்மைத்துவம் நிறைந்த மூலகங்களிடமிருந்து கிடைக்கப்பெறுகிறது.

Google.orgஐப் பற்றி (google.org) : கூகிளின் (Google) தொண்டு நிறுவனமான Google.org மனிதக்குலத்தின் மிகப் பெரிய சவால்களில் சிலவற்றைத் தீர்க்க உதவும் வகையில், நிதி, தயாரிப்பு நன்கொடைகள் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் போன்ற Googleஇன் சிறந்த வளங்களை ஒன்றுசேர்த்து, பின்தங்கிய சமூகங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்குவதற்கும் விளைகிறது. இந்நிறுவனம், அவர்கள் சேவை செய்யும் சமூகங்களில் குறிப்பிடத்தக்கத் தாக்கத்தை ஏற்படுத்தும், மற்றும் அளவிடக்கூடிய பணி புரியும், அர்த்தமுள்ள மாற்றத்தை உருவாக்கும் திறனைக் கொண்டதுமான இலாப நோக்கற்ற நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்கள் போன்றவற்றுடன் ஒன்றிணைந்து பணிபுரிகிறது.



# இன்று உலக தாய்மொழி தினம்



பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ்
முன்னாள் தூதுவர்
மஸ்கெலியா

ஓர் இனத்தின் அடையாளமாக விளங்குவது மொழி. மொழியினது வளர்ச்சியினை சார்ந்தே அந்த இனத்தின் கலை, கலாசார, சமூக, பண்பாட்டு அம்சங்கள் வளர்ச்சியுறுகின்றன.

ஒரு சமூகம் வாழ்ந்ததற்கான குறியீடாகக் காணப்படுகின்ற இந்த மொழியானது, மக்கள் தமது கருத்துக்களை மற்றவர்களோடு பரிமாறிக் கொள்ள உதவுகின்ற ஒரு ஊடகமாகச் செயற்படத் தொடங்கியதிலிருந்து அந்த மொழியினைச் சார்ந்த சமூக கட்டமைப்புகளும் உருவாகத் தொடங்குகின்றன.

பாரம்பரியமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்ற பண்பாட்டு மரபுகள், நினைவுகள், ஞாபகச்சின்னங்கள், எண்ணங்கள், நூல்கள், ஆவணங்கள், கலைகள், புத்தாக்கங்கள், புராதனக் காலத்து அறிவுப் பொக்கிஷங்கள், மருத்துவக் குறிப்புகள், வெளிப்பாடுகள் போன்றனவே வளமான எதிர்காலத்தினை உறுதிப்படுத்தும்.

எமது முன்னோர்கள் கட்டிக் காத்து, பராமரித்து வந்த பாரம்பரிய அம்சங்களை, அதனுடைய தாற்பரியங்களை, எதிர்கால சமுதாயத்துக்குக் கடத்தும் ஒரு கருவியான தாய் மொழியினை தரணியில் மேலோங்கச் செய்வதில் நாம் என்றும் பின்னிற்கக் கூடாது.

இந்த உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும் அதனது முதலாவது ஆகாரமாக அமைவது தாய்ப்பால் தான். அதுபோல மனிதனுக்குத் தாய் மொழியும் அவசியமானது. உலகில் உள்ள ஒவ்வொரு தனிமகனும், சமூகமும் அந்த இனத்திற்கே உரித்தான மொழிக்காக உரிமைக்குரல் கொடுத்துப் போராடுவதனை இன்றும் கண்கூடாகக் காண்கின்றோம்.

அந்த வகையில், தாய்மொழிக்காக, போராடிய ஒரு மக்கள் கூட்டத்தினருக்காக உருவாக்கப்பட்ட ஒரு தினம் தான் ‘தாய்மொழி தினம்’. காலனித்துவ ஆட்சியில் இருந்து உலக நாடுகள் விடுதலை பெற்றுக் கொண்டிருந்த காலகட்டமது. அதனது தொடர்ச்சியாக 1947ஆம் ஆண்டு இந்தியாவும், பாகிஸ்தானும், பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து விடுதலை பெற்றன. சுதந்திர பாகிஸ்தான் என்ற கட்டமைப்புக்குள் பாகிஸ்தானின் மேற்கு, கிழக்கு ஆகிய இரண்டு பகுதிகள் உள்வாங்கப்பட்டிருந்தன.

மத ரீதியாக இரு பகுதிகளிலும் வாழ்ந்த மக்கள் ஒன்றிணைந்தவர்களாகக் காணப்பட்டாலும், மொழி ரீதியாக வேறுபடுத்தப்பட்டவர்களாகவே இருந்தனர். உருது மொழியே மேற்கு பாகிஸ்தானில் (இன்றைய பாகிஸ்தான்) அதிகமாகப் பேசப்படுகின்ற மொழியாகும். கிழக்கு பாகிஸ்தானில் (இன்றைய பங்களாதேஷ்) அதிகளவு பேசப்படுகின்ற மொழி வங்க மொழியாகும்.

அன்றைய காலகட்டத்தில் இரு நாடுகளுக்குமான தேசிய மொழியாக இருந்தது உருது மொழியாகும். வங்க மொழியினை அதிகமாகப் பேசுகின்ற கிழக்கு பாகிஸ்தானியர்கள் தம்மீது உருது மொழி திணிக்கப்படுவதனை விரும்பாது, அதனை எதிர்க்கத் தலைப்பட்டனர்.

உரிமைகள் எங்கு மறுக்கப்படுகின்றனவோ அங்குப் போராட்டங்கள் உருவாவது தவிர்க்க முடியாத ஓர் அம்சம். அந்த வகையில் வங்க மொழியினை தமது தேசிய மொழியாகப் பிரகடனம் செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தில் கிழக்குப் பாகிஸ்தானியர்கள் 1952ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இருபத்தோராம் திகதி ‘வங்க மொழி இயக்கம்’’ என்றவொரு இயக்கத்தினை உருவாக்கினர்.

அந்த இயக்கத்தைச் சார்ந்த மாணவர்கள், அரசியல் தலைவர்கள், கல்விமான்கள், மக்களென பல்வேறுபட்ட தரப்பினரும் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டனர். அன்றைய ஆட்சியாளர்களது அடக்குமுறை நடவடிக்கைகள், தொடர்ச்சியான போராட்டங்கள், ஆகியவற்றின் வெளிப்பாடாக 1956ஆம் ஆண்டு வங்க மொழி கிழக்கு பாகிஸ்தானின் தேசிய மொழியாக பிரகடனப்படுத்தப்பட்டது.

அந்த போராட்டத்தின் விளைவாக, உயிரிழந்தவர்களின் நினைவு கூறும் முகமாக, ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம் இருபத்தோராம் திகதியினை உலக தாய்மொழி தினமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்கின்ற தீர்மானத்தை வங்கதேச அறிஞர் ரபீகுல் இஸ்லாம் அவர்கள் 1998ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனமான யுனெஸ்கோவில் முன்மொழிந்தார்.

அதற்கமைய, சர்வதேச தாய்மொழி தினமானது 1999ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனமான யுனெஸ்கோ அமைப்பின் பொது மகாநாட்டில் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை 2002இன் A/RES/56/262 தீர்மானமானது இந்த பிரகடனத்தை வரவேற்றது. 2002ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பானது பெப்ரவரி மாதம் 21ஆம் திகதியினை தாய்மொழி தினமாக அங்கீகரித்தது.

உலகளாவிய ரீதியில் அமைதியை நிலைநாட்டுவதற்கும், பன்மொழி பயன்பாட்டை முன்னேற்றுவதற்கும், உலகில் உள்ள அனைத்துத் தாய்மொழிகளைப் பாதுகாப்பதற்காகவும் உலக தாய்மொழி நாள் ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது.

உலக மக்கள் தொகையில் 40 சதவீதம் பேருக்கு அவர்கள் பேசுகின்ற மொழி அல்லது அவர்களுக்குப் புரிகின்ற மொழியில் கல்வி கிடைப்பதில்லையென யுனெஸ்கோ குறிப்பிடுகின்றது.

யுனெஸ்கோ நிறுவனத்தின் ஆய்வுகளின் படி, உலகில் 7,000 மொழிகள் பேசப்படுகின்றன. இந்த மொழிகளில் சில சிறிது சிறிதாக அழிவடைந்து வருகின்றனவென அறியும் பொழுது, அது வேதனையை அளிக்கின்றது.

பத்தாயிரம் மக்களுக்குக் குறைவான மக்களால் பேசப்படுகின்ற மொழிகள் அழிவடையும் ஆபத்தான நிலையில் உள்ளதாக அந்த ஆய்வு மேலும் கூறுகின்றது. எந்த மொழியும் பாட மொழியாகவும், பயிற்று மொழியாகவும், மக்கள் பேசுகின்ற மொழியாகவும், இல்லாவிட்டால், அந்த மொழி எத்துணை சிறப்பு மிக்க மொழியாக இருந்தாலும் நாளடைவில் அழிந்து போய் விடும்.

புத்த பகவான் பேசிய ‘பாளி மொழி’ வழக்கிழந்து போனதற்கும் இது தான் காரணம். இயேசுநாதர் பேசிய ‘ ஹீப்ரூ’ என்ற எபிரேய மொழியும் ஒரு காலத்தில் வழக்கிழந்த மொழி தான்.

1948ஆம் ஆண்டுக்கு முன்பதாக இஸ்ரேல் என்ற ஒரு தேசம் இருந்ததில்லை. பல நாடுகளில் பரவலாக வாழ்ந்து வந்த யூதர்கள் அந்தந்த நாட்டு மொழியைத் தான் கற்று வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு தங்களது மூதாதையர் மொழியான ஹீப்ரூ மொழி பற்றி எதுவும் தெரியாது. பாலஸ்தீனத்திலும் ஹீப்ரூ ஒரு வட்டார மொழியாகவே இருந்து வந்தது. அதனால் அந்த மொழியில் பாரியளவிலான வளர்ச்சி ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால், இஸ்ரேல் என்ற தேசம் உருவாக்கப்பட்டதன் பிறகு அங்கு அரிச்சுவடி முதல் பட்டப்பின் படிப்பு வரை ஹீப்ரு மொழியில் பயிற்றுவிக்கப்படுகிறது.

மொழி ஒன்று அழிவடைந்து வருகின்றது என்றால், அதற்கு காரணம் அந்த மொழியினை பேசுகின்ற மக்களும், சமூகமும் தான் எனலாம்.

ஒரு மொழி அழிவடைகின்றது என்றால், உலகைப் பார்க்கின்ற தனித்துவமான வழி ஒன்று மூடப்பட்டு விடுகின்றது என்பது தான் அதன் அர்த்தம் ஆகும். ஒரு மொழி அழியும் பொழுது நாம் அந்த மொழியை மட்டும் இழக்கவில்லை. அதனுடன் இணைந்த உன்னதமான அறிவினையும், ஆற்றலையும் சேர்த்தே இழந்து விடுகின்றோம்.

நாம் எமது தாய் மொழியினை அடுத்த தலைமுறைக்கு கற்றுக்கொடுக்காத பொழுது மொழிப் பயன்பாட்டினை இழக்கின்றோம். சமூக, அரசியல், பொருளாதார காரணங்களால் இன்று பெருமளவான மக்கள் தமது தாய் நாட்டிலிருந்து பிற நாடுகளுக்கு இடம்பெயர்ந்து செல்கின்றனர்.

அவ்வாறு புலம்பெயர்ந்து செல்கின்ற பொழுது, அவர்கள் தமது தொழில் நிமித்தம் அந்தந்த நாடுகளில் இருக்கின்ற மொழிகளைக் கற்று, தாம் குடியேறிய நாடுகளிலுள்ள கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டிய சூழ்நிலையேற்பட்டு விடுகின்றது. இதனால் படிப்படியாக தமது தாய் மொழியினை இழந்து விடக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றது.

கடந்த காலங்களில் ஆபிரிக்க கண்டத்திலிருந்து அமெரிக்காவிற்குச் சென்ற கறுப்பின மக்கள் தமது பாரம்பரிய மொழிகளை மறக்கத் தொடங்கி விட்டது வரலாற்று நிகழ்வாகும்.

தாய் மொழிகள் வளர்த்தெடுக்கப்பட வேண்டியவை. அவைகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவை. உலக அளவில் அதிக மக்களால் பேசப்படக்கூடிய மொழிகளில் ஒன்றாக எம் தாய் மொழியான தமிழ் மொழி பதினைந்தாவது இடத்தில் இருக்கின்றது.

ஸ்ரீலங்காவில் அரசகரும மொழியாகத் தமிழ் இருக்கின்றது. மலேசியா, மொரிசியஸ் போன்ற நாடுகளில் அங்கீகாரம் பெற்ற மொழியாக திகழ்கின்றது. சிங்கப்பூரில் அது ஆட்சி மொழியாக விளங்குகிறது.



சொல் வளம் மிக்க மொழியாகத் தமிழ் மொழி காணப்படுகின்றது. அறிவியல், தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்று வருகின்ற இன்றைய காலகட்டத்தில் புதிய சொற்கள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். அதேவேளை, பழந்தமிழ் சொற்கள் பாதுகாக்கப்பட வேண்டியது காலத்தின் தேவை. வழக்கத்தில் பயன்படுத்தப்படுகின்ற தமிழ்ச் சொற்கள் ஆயிரமாக இருந்தாலும், அகராதியில் இருக்கும் சொற்கள் இலட்சத்தைக் கடந்தவை.

மொழி வளர்ச்சியில் கலைச் சொல்லாக்கம் உருவாக்கப்படுதல் அவசியம். அந்த வகையில், அன்றைய காலகட்டங்களில் வாழ்ந்த இலங்கையையும், ஏனைய நாடுகளையும் சேர்ந்த தமிழ் அறிஞர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகளைப் பாராட்டுவது அவசியமாகும்.

1832ஆம் ஆண்டு ரேனியஸ் பாதிரியார் எழுதிய ‘பூமி சாஸ்திரம்’, 1849ஆம் ஆண்டு இலங்கையில் வெளியான ‘பால கணிதம்’, 1855ஆம் ஆண்டு டாக்டர். கரோல் எழுதிய ‘குறியீட்டுக் கணிதம்’, இலங்கையில் வாழ்ந்த அமெரிக்கரான டாக்டர். சாமுவேல் கின் என்பவரால் 1850-1855 ஆண்டுக் காலப் பகுதியில் தமிழாக்கம் செய்யப்பட்ட மருத்துவத் துறைக்கான நூல்கள், போன்றவைகள் ஆரம்பக் காலப் பகுதியில் தமிழ் மொழி வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட சில முயற்சிகளாகும்.

வீரமாமுனிவரின் ‘சதுரகராதியைத்’ தொடர்ந்து ‘இலக்கியச் சொல்லகராதி;’ என்ற அகராதியை சுன்னாகம் குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் தொகுத்து, தமிழுக்குப் பெருமை சேர்த்தார்.

‘மோகனாங்கி’ என்ற முதலாவது தமிழ் வரலாற்று நூலினை திருகோணமலையைச் சேர்ந்த தி.த. சரவணமுத்துப் பிள்ளை எழுதினார். இதுபோல, ‘அபிதான கோசம் ‘ என்ற கலைக் களஞ்சியத்தினை முதலாவது உருவாக்கியவர் மானிப்பாயைச் சேர்ந்த ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களாவார். முதன்முதலாக ‘யாழ்’ என்னும் இசைக் கருவி குறித்து சுவாமி விபுலானந்த அடிகளார் அவர்கள் ஆய்வு நூல் ஒன்றினை எழுதினார். இந்த பட்டியலில் தமிழ் நாட்டு அறிஞர்களது பங்களிப்பும் ஏராளமாக உள்ளது.

‘தேமதுர தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் ‘ என்ற மகா கவி பாரதியாரின் கவியினது வரிகளுக்கு உயிரோட்டம் தந்து கொண்டிருப்பவர்கள் இன்று புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் எம்மவர்கள் தான். அவர்களால் தான் எமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் உலகளாவிய ரீதியில் பரவலாக மேம்படுத்தப்பட்டுச் செல்கின்றது. உலகத்தவர்கள் மத்தியில் தமிழ் என்ற பண்டைய மொழியின் சிறப்பம்சங்களைப் பறைசாற்றிக் கொண்டிருப்பவர்களும் அவர்கள் தான்.

பிற நாடுகளில் வசிக்கின்ற மக்கள் தத்தமது குழந்தைகளுக்குத் தாய் மொழியின் அவசியத்தினை உணர்த்துவதன் மூலம் அந்த மொழியானது படிப்படியாக எதிர்கால சந்ததியினருக்கு வாழையடி வாழையாகக் கடத்தப்பட வேண்டுமென்பதே தாய் மொழியினை நேசிக்கும் அனைவரதும் எதிர்பார்ப்பு ஆகும்.

இஸ்ரேல்



# “பிணைக்கைதிகளை விடுவிக்க ரமலான் வரையில் கெடு”

கடந்த ஒக்டோபர் மாதம் பலஸ்தீன-ஹமாஸ் அமைப்பினர், தெற்கு இஸ்ரேல் பகுதியில் அதிரடியாக நுழைந்து பல இஸ்ரேலியர்களை கொன்று, பலரை பிணைக்கைதிகளாக பிடித்து சென்றனர்.

இச்சம்பவத்தை தொடர்ந்து இஸ்ரேலிய இராணுவ படை, ஹமாஸ் அமைப்பினர் ஒளிந்திருக்கும் பலஸ்தீன,காசா பகுதியில் அவர்களை தேடித்தேடி அழித்து வருகிறது.

130 நாட்களை கடந்து போர் தீவிரமடைந்துள்ள நிலையில், இதுவரை இஸ்ரேல் தாக்குதலில் பலஸ்தீனத்தில் 28,000 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

பிணைக்கைதிகளை விட வேண்டுமானால், நிரந்தர போர் நிறுத்தம் வேண்டும் என ஹமாஸ் அமைப்பினர் கோரிக்கை வைத்தனர். ஆனால், போர் நிறுத்த கோரிக்கையை ஏற்க மறுத்த இஸ்ரேல், பிணைக்கைதிகளை விடுவிக்க ஹமாஸ் அமைப்பினருக்கு கெடு விதித்திருக்கிறது.

இது குறித்து இஸ்ரேலிய கேபினெட் அமைச்சர் பென்னி கான்ட்ஸ் (Benny Gantz) தெரிவித்ததாவது,

“மார்ச் 10 அல்லது 11 காலகட்டத்தில் இஸ்லாமியர்களின் ரமலான் மாதம் தொடங்கும். ரமலான் தொடங்கும் முன் ஹமாஸ் அமைப்பினர் பிணைக்கைதிகளை விடுவிக்கா விட்டால், பலஸ்தீன ரஃபா (Rafah) பகுதியில் தாக்குதலை மேலும் தீவிரப்படுத்துவோம்.

அப்பகுதியில் உள்ள பொதுமக்களை அப்புறப்படுத்த அமெரிக்கா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுடன் பேசவுள்ளோம். இது தீவிரமான நடவடிக்கைதான்.

ஹமாஸ் அமைப்பினருக்கு 2 வாய்ப்புகள் உள்ளன. அவர்கள் பிணைக்கைதிகளை விடுவித்து விட்டு சரணடையலாம். இதன் மூலம் காசா மக்களும் ரமலான் கொண்டாடமுடியும். இல்லையென்றால், தீவிர தாக்குதலை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்” என தெரிவித்துள்ளார்.

வட கொரியா

# கிம் ஜாங் உன்னுக்கு பரிசளித்த புட்டின்



ரஷ்யாவும், வடகொரியாவும் நட்பு நாடுகளாக திகழ்கின்றன. வடகொரிய ஜனாதிபதி கிம் ஜங் உன் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் ரஷ்யா சென்றார். இந்த பயணத்தின்போது அவர், ரஷ்ய ஜனாதிபதி புட்டினை சந்தித்தார். இந்த சந்திப்பில், ரஷ்ய ஜனாதிபதி புட்டின், தான் பயன்படுத்தும் ரஷ்ய தயாரிப்பு சொகுசு காரான அன்ரூஸ் செனட் காரை வடகொரிய ஜனாதிபதியுக்கு காட்டினார். அந்த காரில் வடகொரிய ஜனாதிபதி கிம், பின் இருக்கையில் இருந்து பயணம் செய்தார்.

இந்நிலையில், வடகொரிய ஜனாதிபதியுக்கு ரஷ்ய ஜனாதிபதி புட்டின் கடந்த ஞாயிற்றுக்கிழமை புதிய கார் ஒன்றை பரிசளித்துள்ளார். ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட அந்த கார் வடகொரிய ஜனாதிபதியின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக பரிசளிக்கப்பட்டுள்ளது. பரிசளிக்கப்பட்ட கார் எந்த வகையானது? எவ்வாறு வடகொரியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது? என்ற விபரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

அதேவேளை, கார் பரிசளித்த ரஷ்ய ஜனாதிபதியுக்கு வடகொரிய ஜனாதிபதி கிம் ஜங் உன்னின் தங்கை கிம் யொ ஜாங் நன்றி தெரிவித்துள்ளார்.

ரஷ்யா

# “அவர் விட்டு சென்ற பணியை தொடர்வேன்”

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் விமர்சகரும், ரஷ்ய அரசியலில் எதிர்கட்சித் தலைவராகவும் கருதப்பட்ட அலெக்சி நவால்னி (Alexei Navalny) பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, 19 வருடங்களுக்கும் மேலாக நீண்டகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, ரஷ்ய தலைநகர் மாஸ்கோவிற்கு வடகிழக்கே, சுமார் 1200 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கார்ப் (Kharp) நகர் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில், சில தினங்களுக்கு முன் சந்தேகத்திற்கு இடமான முறையில் சிறைச்சாலையில் நவால்னி உயிரிழந்தார். சிறைச்சாலை வளாகத்தில் நடைபயிற்சி மேற்கொண்டிருந்தபோது மயங்கி விழுந்தவர், மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டும் பலனின்றி உயிரிழந்ததாக சிறை அதிகாரிகள் தெரிவித்தனர்.


அலெக்சி நவால்னியின் திடீர் மரணம் அவரது ஆதரவாளர்களையும், உலகெங்கும் உள்ள அரசியல் தலைவர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்நிலையில், அலெக்ஸி நவால்னியின் மனைவி யூலியா நவல்னயா (Yulia Navalnaya) இது குறித்து தொலைக்காட்சியில் கண்ணீர் மல்க பேசினார்.

அப்போது அவர், “3 தினங்களுக்கு முன் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், என் கணவரான அலெக்சி நவால்னியை கொன்று விட்டார். கிட்டத்தட்ட 3 வருடங்களாக பல்வேறு துன்புறுத்தல்களை சிறையில் அனுபவித்து வந்த அலெக்சி சிறையிலேயே உயிரிழந்தார். அவர் விட்டு சென்ற பணிகளை நான் தொடர்ந்து செய்வேன்.

அலெக்சிக்காக நாம் செய்ய கூடியது மேலும் தீவிரமாகவும், மேலும் வேகத்துடனும் போராடுவதுதான். போர், ஊழல், அநீதி, சுதந்திரமில்லாத தேர்தல், கருத்து சுதந்திர முடக்கம், நாட்டில் நிலவும் அடிமைத்தனம் ஆகியவற்றுக்கு எதிராக அவர் முன்னெடுத்த போராட்டத்தை நாம் மேலும் வலுப்பெற செய்து போராட வேண்டும்.

எனது கணவரை கொன்றவர்களை நான் வெளியுலகிற்கு காட்டுவேன். அவர்களின் முகங்களையும், பெயர்களையும் உலகம் பார்க்குமாறு நாம் காட்டுவோம்.” என தெரிவித்துள்ளார்.



ஆந்திர பிரதேசம்

# உலக சாதனை படைத்த 4 மாத குழந்தை

ஆந்திர பிரதேச மாநிலம் - நாடிகாமா பகுதியைச் சேர்ந்தவர் ஹேமா. இவருக்கு திருமணமாகி நான்கு மாதங்களுக்கு முன்பு கைவல்யா என்ற பெண் குழந்தை பிறந்துள்ளது. இந்த குழந்தை மிகச் சிறிய வயதிலேயே காய்கறிகள், பழங்கள், பறவைகள், புகைப்படங்கள் என வெவ்வேறு 120 பொருட்களை அடையாளம் காணும் திறமையைக் கொண்டுள்ளார்.

தனது குழந்தையின் திறமையை வெளி உலகத்திற்குக் கொண்டு வர நினைத்த ஹேமா, அதன்படி, குழந்தை அடையாளம் காணும் பொருட்கள் தொடர்பாக வீடியோ ஒன்றை எடுத்துள்ளார். மேலும், அந்த வீடியோவை நோபல் உலக சாதனைக்கு அனுப்பி வைத்துள்ளார்.


குழந்தையின் வீடியோவை கண்ட நோபல் உலக சாதனை குழுவினர், கைவல்யா உலக சாதனைக்கு தகுதியானவர் என்று முடிவு செய்து குழந்தைக்கு சிறப்பு சான்றிதழை வழங்கியுள்ளனர்.

இதன் மூலம், 4 மாத குழந்தையான கைவல்யா உலக சாதனை படைத்து பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார். குழந்தையின் திறமையை உலகிற்கு காட்டுவதற்காக இந்த முயற்சியை மேற்கொண்டதாக குழந்தையின் தாய் ஹேமா தெரிவித்துள்ளார். இந்த சாதனைக்கு பலரும் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.




## சக்தி வாய்ந்த கடவுச்சீட்டு பட்டியலில்

# ஒரு இடம் பின்தங்கிய இந்தியா




உலகின் சக்தி வாய்ந்த கடவுச்சீட்டு பட்டியலை லண்டனை தலைமையிடமாக கொண்டு செயல்படும் ஹென்லி கடவுச்சீட்டு இன்டெக்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதில், ஐரோப்பிய நாடான பிரான்ஸ் முதலிடம் வகிக்கிறது.

ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகள் முறையே 2 முதல் 5 இடங்களில் உள்ளன. அடுத்தபடியாக ஸ்பெயின், பின்லாந்து, நெதர்லாந்து, தென்கொரியா, ஸ்வீடன் ஆகிய நாடுகள் உள்ளன.

இந்த பட்டியலில் இந்தியா 85ஆவது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு இந்தியா 84ஆவது இடத்தில் இருந்தது. தற்போது ஒரு இடம் பின்தங்கியுள்ளது.

## ஆப்கானிஸ்தானுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய இலங்கை



ஆப்கானிஸ்தானுக்கு எதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரை இலங்கை கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்றிருந்த இலங்கை, நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்

இலங்கை: 187/6 (20 ஓவ.)
(துடுப்பாட்டம்: சதீர சமரவிக்கிரம 51 (42), அஞ்சலோ மத்தியூஸ் ஆ.இ 42 (22), பதும் நிஸங்க 25 (11), குசல் மென்டிஸ் 23(14), வனிடு ஹசரங்க 22 (09) ஓட்டங்கள்.
பந்துவீச்சு: மொஹமட் நபி 2/25 [4], பஸல்ஹக் பரூக்கி 1/31 [4])

ஆப்கானிஸ்தான்: 115/10 (17 ஓவ.)
(துடுப்பாட்டம்: கரிம் ஜனட் 28 (23), மொஹமட் நபி 27 (17) ஓட்டங்கள்.
பந்துவீச்சு: அஞ்சலோ மத்தியூஸ் 2/9 [4], வனிடு ஹசரங்க 2/19 [4], மதீஷ பத்திரண 2/22 [3], மகேஷ் தீக்ஷன 1/30 [4])

போட்டியின் நாயகன்: அஞ்சலோ மத்தியூஸ்

இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டி இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

Official Sponsor of the National Cricket Team
Sri Lanka Cricket
Dialog

## டயலொக் கனிஷ்ட தேசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப்:

# சம்பியனான குருநாகல் ஏ அணி

Dialog JUNIOR
NATIONAL NETBALL CHAMPIONSHIP 2023

டயலொக் கனிஷ்ட தேசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரில் கன்னியர் மட்ட பாடசாலையால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட குருநாகல் மாவட்ட ஏ அணி சம்பியனாகியது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில், ஹில்வூட் கல்லூரியால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட கண்டி மாவட்ட அணியை 25-17 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றே குருநாகல் மாவட்ட ஏ அணி சம்பியனாகியது.

இந்நிலையில் வலைப்பந்தாட்ட இராணியாக குருநாகல் மாவட்ட ஏ அணியின் சலனி நீஷா தெரிவானார்.




# கொல்கத்தா நைட் றைடர்ஸில் சமீர

இங்கிலாந்து வேகப்பந்துவீச்சாளர் குஸ் அட்கின்ஸனின் பிரதீயிடாக இலங்கையின் துஷ்மந்த சமீரவை இந்தியன் பிறீமியர் லீக்கின் கொல்கத்தா நைட் றைடர்ஸ் அணி கைச்சாத்திட்டுள்ளது.

ஏலத்தில் வேண்டப்பட்டிருக்காத 32 வயதான சமீர, 50 இலட்சம் இந்திய ரூபாய்களுக்கே நைட் றைடர்ஸுடன் இணைகின்றார்.

முன்னதாக ராஜஸ்தான் றோயல்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர், லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸில் சமீர விளையாடியிருந்தார்.



# மியூனிச்சின் தெரிவாக சொல்க்ஜர்?

ஜேர்மனிய புண்டெஸ்லிகா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சானது அதன் முகாமையாளர் தோமஸ் துஷெல்லை பதவி நீக்கத் தீர்மானித்தால் குறுகிய காலத் தீர்வாக இங்கிலாந்து பிறீமியர் லீக்கின் மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்னால் முகாமையாளர் ஒலெ குனார் சொல்க்ஜரையும் கருத்திற் கொள்வதாகக் கூறப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 21, பெப்ரவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.